27.11.2019

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், இலால்குடி.

அசல் வழக்கு எண். 330/12

பி.சா.1 (ஆரோக்கியசாமி த/பெ.அற்புத அந்தோணி) குறுக்கு விசாரணை தொடர்ச்சி:

100/6பி என்ற சர்வே எண்ணிற்கு எனது மனைவி தோமையம்மாள் பெயரில் தோராய பட்டா உள்ளதா என்றால் உள்ளது. எனக்கு ஏதும் அறிவிப்பு வந்ததா என்றால் இல்லை. வட்டாட்சியர் உத்தரவு ஏதும் உள்ளதா என்றால் இல்லை. எனக்கு சொத்து பாத்தியம் இல்லை என்றாலும் அதனால் தான் உத்தரவு ஏதும் தாக்கல் செய்யஇயலவில்லை என்றாலும் சரியல்ல. அறிவிப்பு இல்லாமல் உத்தரவு இல்லாமல் பட்டா மோசடியாக பெறப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிர்கோருரிமைக்கு சர்வே எண் என்ன என்றால் 100/9பி1ல் வடபாகம். எதிர்கோருரிமைக்கு தனி உட்பிரிவு உள்ளதா என்றால் இல்லை. 100/9பி1ல் வாதிகள் சேர்த்து பட்டா வாங்கிவிட்டார்கள். வாதிகள் சேர்த்து பட்டா வாங்கிவிட்டார்கள் என்று அப்பீல் ஏதும் போட்டேனா என்றால் வட்டாட்சியரிடம் போட்டேன். மேற்படி அப்பீலின் நகல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. RDO விடம் அப்பீல் ஏதும் செய்தேனா என்றால் இல்லை. பி.சா.ஆ.3 26.06.1985 தேதியிட்ட கிரையப்பத்திரம் செல்லாது என்றாலும் அதன்படி எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றாலும் அதனால் தான் எனக்கு அந்த சொத்துக்கு பட்டா கிடைக்கவில்லை என்றால் சரியல்ல. உரிமையில்லாத சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற நோக்கத்திற்காக கட்சி செய்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு எதிர்கோருரிமை கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 16.09.2012 தேதியிட்ட புகார் மனு, ரசீது தாக்கல் செய்துள்ளேன். அதன்மீது ஏதும் நடவடிக்கை எடுத்தார்களா என்றால் நான் முயற்சி செய்தேன். நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லை. நான் கொடுத்தது பொய் புகார் என்று தெரிந்துதான் நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் அனைத்தும் வாதியின் சொத்து என்றாலும் அதனை அபகரிக்க வேண்டும் என்பதற்காக நான் கட்சி செய்கிறேன் என்றால் சரியல்ல. என் மனைவியால் கிரையம் பெறப்பட்ட சொத்து. என் மனைவி நீதிமன்றத்திற்கு வந்து சாட்சியம் அளிக்கவில்லை என்றால் சரிதான். பி.சா.ஆ.3 கிரையப்பத்திரம் மோசடியானது என்பதால் தான் என் மனைவி சாட்சியம் அளிக்கவில்லை என்றால் சரியல்ல. 2ம் வாதி பிச்சைக்கு 1ம் வாதி 02.08.2012ல் எழுதிக் கொடுத்த கிரையம் பற்றி தெரியும் என்றாலும் அதன்படி அந்த சொத்து 2ம் வாதிக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. 2ம் வாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தை சம்மந்தம் இல்லாமல் நான் ஒரு ஆவணத்தை ஏற்படுத்தி கொண்டு வாதியின் சொத்தை அபகரிக்க முயற்சி செய்கிறேன் என்றால் சரியல்ல. பி.சா.ஆ.2 ஆவணம் செல்லாது என்றாலும் மோசடி ஆவணம் என்றாலும் சரியல்ல. தாவா

சொத்துக்கள் வாதிக்கு பாத்தியப்பட்டது என்றாலும் அதில் எனக்கு ஒரு போதும் அனுபவம் இருந்ததில்லை என்றாலும் சரியல்ல. வாதிகள் உடல்நிலை சரியில்லாமல் சிகிச்சைக்காக இலால்குடியில் உள்ளார்களா என்றால் தெரியாது. 1ம் வாதி எங்கு இருக்கிறார் என்றால் 1ம் வாதி பழனியாண்டி செம்பரை கிராமத்தில் இருப்பதில்லை. அவர் எங்கு இருக்கிறார் என்று தெரிந்து கொண்டேனா என்றால் பிரச்சினை ஏற்பட்ட போது தெரிந்து கொண்டேன். அவர் எங்கு இருப்பதாக தெரிந்து கொண்டேன் என்றால் திருச்சியில் இருப்பதாக தெரிந்து கொண்டேன். அவர் சொந்த ஊர் செம்பரை என்றால் சரிதான். 2ம் வாதி பிச்சை செம்பரை கிராமத்தில் இருக்கிறாரா என்றால் தெரியாது. அவர் எங்கு இருப்பதாக தெரிந்து கொண்டேன் என்றால் இலால்குடியில் இருப்பதாக தெரிந்து கொண்டேன். வாதிகளுக்கு சொந்த கிராமமே செம்பரை தான் என்றாலும் அவர்கள் உடல்நலம் சரியில்லாததால் 1ம் வாதி திருச்சியிலும், 2ம் வாதி இலால்குடியிலும் இருந்து வருகிறார்கள் என்று சொன்னால் சரிதான். தாவா சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற கெட்ட நோக்கத்திற்காக வழக்கு நடத்துகிறேன் என்றால் சரியல்ல.